2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

(ஆ) உறுப்பினர்கள் கேள்விகளுக்கு துறைகள் பதில் தருவதில் தாமதம்.

திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உரிமைப் பிரச்சினை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகத்தின் நிர்வாகம் குறித்து மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களிடம் காட்டுமன்னார்கோயில் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் கேட்டிருந்த ஒரு கேள்விக்கு, கடந்த ஓராண்டுக் காலமாக—இதுவரையிலும்—அந்தத் துறையின் செயலாளரிடமிருந்து அந்த வினாவுக்கு உரிய பதில் அறிக்கை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சருக்கு வராமல் இருக்கிறது. இது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை மிகவும் பாதிப்பதாக இருக்கிறது. ஒரு முக்கிய பிரச்சினை குறித்து எழுப்பப்பட்ட வினாவுக்கு ஓராண்டுக் காலமாக சம்பந்தப்பட்ட சமூக நலத்துறையிலிருந்து பதில் வராமல் இருப்பது உறுப்பினர்களின் உரிமையை மிகவும் பாதிக்கிறது. எனவே அந்தக் கேள்வி என்ன ஆனது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளை எழுதிக் கொடுக்கிற நேரத்தில் அமைச்சர்கள் அனுமதி கொடுத்து, அந்தக் கேள்விகள் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளருக்கு அனுப்பப்படுகின்றன. இங்கே நந்தனார் கல்விக் கழகத்தைப் பற்றி சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அந்தக் கேள்வியைக் கொடுத்திருந்தார். அந்தக் கேள்வி ஆதி திராவிடர் நலத்துறையோடு ரெவின்யூ துறைக்கும் சம்பந்தப்பட்டிருக்கிறது. மேலும் சட்டப் பிரச்சினையாகவும் அது இருக்கிற காரணத்தால் கிட்டத்தட்ட காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் கூடிய விரைவில் அந்தத் துறையின் செயலாளருக்கு நான் தாக்கீது அனுப்பி, உடனடியாக அந்தக் கேள்விக்கு பதில் பெறுவதோடு, விளக்கமாக இந்தப் பிரச்சினையைப் பற்றி உடனடியாக கோப்புகளையும் அனுப்புமாறு செயலாளருக்கு உத்தரவு போட இருக்கிறேன்.

1987 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1985 ஆம் ஆண்டு ஜுலை மாதம் கேட்கப்பட்ட கேள்வி 1987 பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி கமர்ஷியல் டாக்ஸ அண்டு ரிலிஜியஸ் என்டோமென்ட் துறையிலிருந்து இங்கு தகவல் வந்திருக்கிறது. இரண்டு ஆண்டு களாகியிருக்கிறது. அமைச்சரின் கவனத்திற்கு துறைச் செயலாளர் இதைக் கொண்டு வந்தாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதாவது உங்களுடைய கவனத்திற்கு உங்கள் துறைச் செயலாளர் கொண்டு வந்தாரா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் கொண்டு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் அந்தத் துறைச் செயலாளரை * உங்களிடம் 20 ஆம் தேதிக்குள் அந்தக் கோப்பைக் கொண்டு வந்து ஆணையைப் பெற உத்தர விடுகிறேன்.

இதுமட்டுமல்ல. சுமார் 275 கேள்விகள் 1985 ஆம் ஆண்டில் கேட்கப்பட்டவை—பல்வேறு துறைகளில் நிலுவையில் இருக் கின்றன.

சுமார் 547 கேள்விகள்—1986 ஆம் ஆண்டு கேட்கப்பட்ட கேள்விகள் பல்வேறு துறைகளில் பதில் அளிக்கப்படாமல்—சட்ட மன்றச் செயலகத்திற்கு பதில் அனுப்பப்படாமல் இருக்கின்றன. ஆகவே இவைகளைக் குறித்த பதில்களையெல்லாம் 20 ஆம் தேதிக்குள் சம்பந்தப்பட்ட துறையினர் சட்டமன்றச் செயலகத் திற்கு அனுப்ப வேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் 11—5—1987 ஆம் தேதிய ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.